[1995 மார்ச் 28

136—

திருநெல்வேலியில் பொருட்காட்சி அரங்கு கட்டுதல்

*35825—திரு. டி. வேல்லயா :

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

திருநெல்வேலி நகராட்சி அலுவலகத்திற்கு எதிரிலுள்ள நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் நிரந்தரப் பொருட்காட்சி அரங்கு கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனயில் இல்லை.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி இப்போது ஒரு மாநகராட்சியாக இருக்கிறது. மூன்று நகராட்சிகள் இணைக்கப்பட்டு, ஒரு பெரிய பகுதியாக அது விளங்குகிறது. அங்கே பொழுதுபோக்கு என்று எடுத்துக் கொண்டால் சில திரையரங்குகளைத் தவிர வேறு வாய்ப்பு இல்லாத பிற்பட்ட பகுதியாக அது இருக்கிறது. கடந்த முறை அங்கே நடந்த பொருட்காட்சியில் அரசுக்கும், உள்ளாட்சி மன்றத்திற்கும் நிறைய வருமானம் வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கே விழாவிற்கு வந்திருந்தபோது நேரிலே கண்டார்கள். ஆகவே அரசுக்கு நல்ல வருமானமும், உள்ளாட்சி மன்றத்திற்கு நல்ல வருமானமும் கிடைக்கின்ற வகையில் வசதியான இடத்தில் அந்தப் பொருட்காட்சியை கூடியவிரைவில் அமைப்பதற்கு மதுரையில் இருக்கிற தமுக்கம் மைதானம் போன்று நிரந்தரமான கட்டிடம் கட்ட அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தித் துறையின் சார்பிலே நடத்தப்படுகின்ற பொருட்காட்சிகள் நகராட்சிகளுக்குச் சொந்தமான இடங்களில் அல்லது மாநகராட்சிகளுக்குச் சொந்தமான இடங்களில்தான் நடத்தப்பட்டு வருகின்றன. ஆகவே திருநெல்வேலியைப் பொறுத்தவரையில் அது மாநகராட்சிக்குச் சொந்தமான இடம். அங்கே நிரந்தர அரங்கை

1995 மார்ச் 28]

அமைக்க வேண்டுமென்றால் மாநகராட்சிதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். திருநெல்வேலி பொருட்காட்சியைப் பொறுத்தமட்டில், அங்கே நடத்தப்பட்டு வந்த பொருட்காட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நிறுத்தப்பட்டது. நிறுத்தப்பட்ட பொருட்காட்சியை திரும்ப நடத்த வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டதற்கிணங்க, 1993ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வருகிறது. அந்த அளவிலே பொருட்காட்சி தொடர்ந்து நடத்தப்படும். நிரந்தரமாக பொருட்காட்சி நடத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரமான பொருட்காட்சிகள் தமிழ்நாட்டில் எங்கே எல்லாம் இருக்கின்றன? ஒரு அரங்கம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் என்ன செலவாகும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருட்காட்சி நடத்துவதற்கான நிரந்தர அரங்கம் தமிழ்நாட்டிலே எங்குமில்லை. ஆனால் மதுரையிலே தமுக்கம் கலை அரங்கம் இருக்கிறது. அது மாநகராட்சிக்குச் சொந்தமானது. அதைப்போல சேலத்திலே பொருட்காட்சி நடத்தப்படுகின்ற இடம் சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம். அதைப்போல கோயம்பத்தூரிலே நடத்தப்படும் இடம் சிறைத் துறைக்குச் சொந்தமான இடம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 137, டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

137—

பாப்பாரப்பட்டி மகளிர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

*33377—**டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்யப்படும் ?